## இராமநாதபுரம் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

(06-02-2016 – 10-02-2016)

**இணைந்து வழங்குபவர்கள்:** இந்திய வானிலை துறை, பிராந்திய வானிலை மையம் சென்னை, ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் மா.ச.சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

தேதி: 05-02-2016

### கடந்த கால வானிலை 02-02-2016 முதல் 04-02-2016 வரை

| காரணிகள் | கடந்த கால வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 0 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 30-31 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 21-22 |
| மேக மூட்டம் | 3-5 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 64-81 |
| காற்றின் வேகம்(கி.மீ /மணி ) | 5-8 |

### எதிர்பார்க்கப்படும் வானிலை 10-02-2016 - 8.30 மணி நேரம் வரை

| காரணிகள் | 06.02.16 | 07.02.16 | 08.02.16 | 09.02.16 | 10.02.16 |
|---|---|---|---|---|---|
| மழை (மி.மீ) | 0 | 8 | 0 | 0.5 | 1 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 30 | 30 | 30 | 30 | 30 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 22 | 22 | 22 | 22 | 22 |
| மேக மூட்டம் | 4 | 4 | 4 | 7 | 7 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 84 | 85 | 86 | 89 | 90 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 68 | 69 | 70 | 75 | 76 |
| காற்றின் வேகம் (கி.மீ / மணி ) | 6 | 6 | 6 | 7 | 7 |
| காற்றின் திசை | கிழக்கு | கிழக்கு | கிழக்கு | கிழக்கு | கிழக்கு |

குறுஞ்செய்தி :

வரும் ஐந்து நாட்களில் இலேசான தூறல் சில இடங்களில் எதிர்பார்க்கப்படுகிறது.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள்: நெல், பருத்தி மற்றும் பருப்பு வகைகள்**

பருவம்: நெல்- முதிர்ச்சி மற்றும் அறுவடை பருவம், பருத்தி- முதிர்ச்சி பருவம்

- வரும் ஐந்து நாட்களுக்கு வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் அறுவடை நிலையில் உள்ள நெல்லினை அறுவடை செய்து நன்கு காய வைத்து ஈரத்தன்மை 13 சதவீதத்திற்கு கீழ் இருக்குமாறு சேமித்து வைத்து பூச்சிகள் இல்லாமல் பாதுகாக்கலாம்.
- பருத்தியில் இலைப்பேன் மற்றும் சாறு உண்ணும் பூச்சினைக் கட்டுப்படுத்த இமிடாகுளோபிரிட் 200SL 100மிலி/ஹெக்டர் தண்ணிரில் கலந்து தெளிக்கலாம்.
- பருத்தியில் வெள்ளை ஈக்கள் மற்றும் தத்துப்பூச்சிகள் தாக்கத்தைக் கட்டுப்படுத்த இமிடாகுளோபிரிட் 17.8 % @ 5 மிலி அல்லது தையோமீத்தாகசம் 6 கிராம் 10 லிட்டர் தண்ணிரில் கலந்து தெளிக்கலாம்.
- நெற்பயிரில் இலை சிலந்தியின் தாக்குதல் பரவலாக தென்படுகிறது, இதனைக் கட்டுப்படுத்த டைக்கோபால் 500 மி.லி./ஏக்கர் அல்லது நனையும் கந்தகத்தூள் 400 கிராம்/ஏக்கர் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்.
- நெல்லில் குலை நோயினைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு ஹனோசான் 200 மி.லி. அல்லது டிரைசைகலசோல் 200 கிராம் தெளிக்கவும். முன்னெச்சரிக்கை நடவடிக்கை ஏக்கருக்கு சூடோமோனோஸ் ப்ளுரசன்ஸ் 500 கிராம் பவுடரை 200 மி.லி. தண்ணீரில் கலந்து மாலை வேளையில் தெளிக்கலாம்.